## 6.1 1997–98–சமத்துவபுரங்கள் 50 இடங்களில் அமைத்தல்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (நி எ 4) துறை

அரசாணை (நிலை) எண் 171 நாள் : 22.10.1997

**ஆணை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளவாறு விடுதலைப் பொன்விழா ஆண்டையொட்டி தமிழகத்தில் ஐம்பது இடங்களில் அனைத்து சாராரும் ஒன்று சேர்ந்து குடியிருக்கும் வகையில் "சமத்துவபுரங்கள் " உருவாக்க 4–8–1997 அன்று முதலமைச்சர் தலைமையில் நடந்த உயர்மட்ட செயல்பாட்டுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டது.

2. அவ்வாறே, தமிழகத்தில் 50 இடங்களில் 100 மனைகளுக்கு குறையாமல் நில எடுப்பு செய்யப்பட்டு, ஆதிதிராவிடர், பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், பிற இனத்தவர் ஆகிய அனைவருக்கும் 5 சென்ட் வீட்டு மனைகள் இலவசமாக வழங்கவும், அம்மனைகளில் வீடுகள் கட்டிக்கொள்ள ஒவ்வொருவருக்கும் ரூ.35,000 மானியமாக வழங்கவும் அரசு ஒப்புதலளிக்கிறது.

3. உருவாக்கப்படும் சமத்துவபுரக் குடியிருப்புகள் கீழ்க்கண்ட வகையில் அமைக்கப்படும் : –

(1) ஒவ்வொரு இடமும் குறைந்தது 100 மனைகள் கொண்டதாக அமையும்.

(2) மனை ஒன்றுக்கு 5 சென்ட் நிலம் வழங்கப்படும்.

(3) 30 அடி அகல வீதிகள்/சாலைகள் அமைக்கப்பட்டு வடிகாலுடன் கூடிய தார்ச் சாலைகளாகவும் அமைக்கப்படும்.

(4) குடிநீர் வசதி, மின் வசதி முழுமையாகப் படைக்கப்பட்டிருக்கும் தெருக் குழாய்களும், தெரு விளக்குகளும் தேவையான அளவில் அரசுச் செலவில் அமைத்துத் தரப்படும். வீட்டு இணைப்புகள் அவரவர் செலவில் வழங்கப்படலாகும்.

(5) ஒவ்வொரு சமத்துவபுரத்திற்கும் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கப்பட வேண்டும். குடிமைப் பொருள் வழங்கு கடை, தொலைக் காட்சி, பூங்கா ஆகிய பொது வசதிகளும் அமையப்பெற்றிருக்கும்.

(6) தேவையின் அடிப்படையில் ஒரு துவக்கப் பள்ளி ஆரம்பிக்கப்படலாம்.

(7) வீட்டுமனைகள் அனைவரும் ஒருங்கிணைந்து வாழுமாறு பின்னிப் பிணைத்து வழங்கப்படலாகும். ஒரே இனத்தவர் ஒரே வரிசையாக அமைவது தவிர்க்கப்பட்டு பல்வகையினரும் அடுத்தடுத்து உறையும் சுற்றமும் சூழலும் உருவாக்கப்படலாகும்.

(8) வீடு கட்டிக் கொள்வதற்காக ஒவ்வொரு மனைதாரருக்கும் வழங்கப்படும் மானியமான ரூ. 35,000/– தவிர கூடுதலாக அவரவர் விருப்பத்திற்கேற்ப வீட்டுவசதிக் கூட்டுறவுச் சங்கங்கள் சங்க விதிகளுக்கு உட்பட்டு கடனுதவி வழங்கும். (நலிந்த பிரிவினருக்கு சமவெளிப் பகுதிகளில் ரூ.10,000/– மலைப் பகுதிகளில் ரூ.12,000/– நகரப் பகுதிகளிலுள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு ரூ.70,000)

(9) மானிய உதவிக்கான நிதி மாவட்ட ஆதிதிராவிட நல அதிகாரியால் வழங்கப்படும்.

(10) அந்தந்தப் பயனாளிகளே தத்தம் வீடுகளைக் குறிப்பிட்டுள்ள பரப்பிற்குக் குறையாமல் வடிவமைத்துக் கட்டிக் கொள்ளலாகும்.

4. சமத்துவபுரத்தில் அமையவிருக்கும் 100 வீடுகளில் ஆதிதிராவிடர்களுக்கு 40 வீடுகளும் பிற்பட்டோருக்கு 25 வீடுகளும், மிகவும் பிற்பட்டோருக்கு 25 வீடுகளும், மற்றவர்களுக்கு 10 வீடுகளும் என்று வகுத்தளிக்கப்பட வேண்டும். பிற்பட்டோர், மிகவும் பிற்பட்டோர், மற்றவர்களிடமிருந்து போதிய விண்ணப்பம் இல்லாத தருணத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிய வகையில் வகுத்தளிக்கலாம்.

5. சமத்துவபுரத்திற்கு எடுக்கப்படும் நிலத்திற்கான மதிப்பில் 40 சதவீதம் ஆதிதிராவிடர் நலத் துறையும், 60 சதவீதம் பிற்பட்டோர், மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத் துறையும் வழங்கும். தேவையான நிலத்தைத் தனியார் இசைவுடன் பெறலாகும். மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரி நில எடுப்புக்குப் பொறுப்பாயிருப்பார். மாவட்ட அளவில் செலவினம்

முழுமையும் ஆதிதிராவிடர் நலத்துறை கணக்கிலேயே எடுக்கப்பட்டு, மாநில அளவில் ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறையிலிருந்து இச் செலவினத்தை ஈடு செய்து கொள்ளும். ஆதிதிராவிடர் நல இயக்குநர், பிற்பட்டோர் நலத் துறை இயக்குநரிடமிருந்து இத் தொகையைப் பெற்றுக் கொள்ளலாகும்.

**6.** பயனாளிகள் தேர்வைச் சீரிய முறையில் செய்யும் பொறுப்பு மாவட்ட ஆட்சித் தலைவரைச் சாரும். மின் இணைப்புக்காகவும், குடிநீர்த் திட்டத்திற்காகவும் அந்தந்தத் துறைகள் ஏற்கெனவேயுள்ள ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் சமத்துவபுரங்களுக்கு முன்னுரிமை தந்து பணிகளை மேற்கொள்ளலாம் அல்லது தனி நிதி ஒதுக்க அந்தந்தத் துறைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து கருத்துரு பெற்று நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

7. இத் திட்டத்திற்காகும் செலவினம் புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2225 பட்டியல் சாதியினர், பட்டியல் பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–80 பொது–800 ஏனைய செலவுகள்–ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II. மாநிலத் திட்டம் JF “சமத்துவபுரம்” உருவாக்குதல் 09 உதவிமானியங்கள் (த.தொ.கு. 2225 80 800 JF 0906).

**8.** மேற்சொன்ன புதிய கணக்கத் தலைப்பிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநர் மதிப்பீட்டு கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார்.

**9.** கணக்குகளில் மேற்கொள்ள புதிய கணக்குத் தலைப்பினை தொடங்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர்/ கருவூல அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**10.** இது புதுப் பணி குறித்த செலவாகும். காலப் போக்கில் இதற்குச் சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பெறப்படும். ஒப்புதல் கிடைக்கும் வரையில் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வரவு–செலவு பொது–1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் வாங்குவதற்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இரு படிகளில் நிதித் (வரவு–செலவு–பொது 1) துறைக்கு அனுப்பிவைக்கும்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**11.** இவ்வாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அ.சா.கு. எண் 457.து.செ. (ஆர்.பி)/97, 21–10–1997–ன்படி பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரா. கிருத்துதாசு காந்தி**
அரசு செயலர்